# பங்களாதேஷில் திடீர்ப்புரட்சி!

விலை ரூபா 1-00 ★

ஈழநாடு
THE EELANADU

மலர் 24 பங்குனி 12 ஜ அவ்வல் 28 இதழ் 41
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25—3—82

## இந்தியா-பங்களாதேஷ் எல்லையில் ராணுவம்உஷார்!

டாக்கா, மார்ச் 24 பங்களாதேஷில்திடீர் இராணுவ புரட்சி மூலம், இராணுவத்தினர் இன்று அதிகாலை ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர். இதைத்தொடர்ந்து ஆயிரத்துக்கு அதிகமான இராணுவத்தினர் டாக்கா நகரில் ரோந்து சுற்றிவருகின்றனர்.

அரசாங்க அலுவலகங்கள், பாடசாலைகள், வங்கிகளை மூடிவிடுமாறு இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளனர்,

### இராணுவச் சபைகள்

ஐந்து பிராந்திய இராணுவச் சபைகள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், கடற்படை, விமானப்படை அதிகாரிகளும் நிர்வாகத்தில் பங்கேற்றுள்ளனர்.

பங்களாதேஷிலுள்ள ஜப்பானிய தூதரகத்திலிருந்து முதன்முதல் கிடைத்த செய்தி இத்திடீர்ப்புரட்சியை ஊர்ஜிதம் செய்துள்ளது.

### முப்படையினரும் உள்ளனர்

ராணுவஜெனரல் ஹுசேன்

(8ம் பக்கம் பார்க்க)

★ தமிழ்ப்பகுதிகளில்

# கூட்டணியின் ஆலோசனைமீது 'ஊர்காவல்படை' நியமனம்!

## அரசு-கூட்டணி சந்திப்பில் நேற்றுத் தீர்மானம்

(கொழும்பு)

**நாடு முழுவதும், மே மாதம் முதலாம் திகதிமுதல் அமைக்கப்படவுள்ள ஊர்காவல் படைகள், தமிழ்ப் பகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆலோசனைப்படியே அமைக்கப்படும்.**

நேற்று மாலை நடைபெற்ற அரசு—கூட்டணி உயர்மட்ட சந்திப்பில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது

இதுபற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு ஊர்காவல்படைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள புதிய பிரதி அமைச்சர் திரு. மேர்வின் குலரத்ன, கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்றைய இச்சந்திப்பில் பிரதமர் கலந்து கொள்ளவில்லை.

தாம் கலந்து கொள்ள முடியாதிருப்பதாக அவர் தெரிவித்திருந்தார்.

அபிவிருத்தி சபைகளில் அமைச்சுகளின் அதிகாரம் பற்றி ஆராய்வதற்கான குழு ஏப்ரல் முதலாம் திகதி பிரதமரைச் சந்தித்த பின்னர் ஏப்ரல் 5 ம் திகதி நடைபெறவிருக்கும் அடுத்த சந்திப்பில் அறிக்கை சமர்பிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

பட்டிருப்பு தாந்தாமலை புறுகநாதியில் அத்துமீறிப்பிரவேசித்த இரு பௌத்தபிக்குகளையும் வெளியேற்ற பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு உத்தரவு வழங்குவதாகவும் இச்சந்திப்பில் ஜனாதிபதி தெரிவித்தார். நேற்றைய பேச்சுவார்த்தைகளில் மாணிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கமும் கலந்து கொண்டார்.

(இ — ம)

## ரிட்மனுமீது விசாரணை: ஆட்சேபனைமீது இன்று தீர்ப்பு

(கொழும்பு)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலை ரத்துச்செய்யக்கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டிருந்த ரிட்மனுமீதான விசாரணையில் பிரதிவாதிதரப்பில் ஆஜரான சட்டத்தரணி திரு, கே. எஸ். சொக்ஸி தெரிவித்த ஆட்சேபம் தொடர்பாக இன்று தீர்ப்பு வழங்கப்படும் என்று நீதியரசர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.

மனுதாரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. எம். சோமசுந்தரம் நேற்றைய விசாரணையில் 'ஹன்சார்ட்' ஒன்றை வாசிக்க முன்வந்தபோதே சட்டத்தரணி திரு. கே. எஸ். சொக்ஸி ஆட்சேபம் தெரிவித்தார்.

ஆட்சேபம் சம்பந்தமாக நாளை (இன்று) தீர்ப்பளிக்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் தெரிவித்தனர்.

## "'நாதன்'120சான்றிதழ்களை பெற்றிருந்தார்" கொலையுண்ட கான்ஸ்டபிளுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்[

கொலையுண்ட பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். மகேஸ்வரநாதனின் பூதவுடல் நேற்றுப் பிற்பகல், பூரண பொலிஸ் மரியாதைகளுடன் கொத்தத்துறை மயானத்தில்

(8ம் பக்கம் பார்க்க)

அகில உலக இந்துமாநாடு

கொடிநாள்

2-04-1982

மேன்மை கொள் சைவநீதி விளங்க நடைபெறும் அகில உலக 'இந்து மாநாடு சிறக்க 2.04.1982ல் நடைபெறும் கொடிநாளன்று கொடிகளைப்பெற்று ஆதரவு நல்குங்கள்.

சிறப்பாகச் செயல்படுபவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஆறுமுகம் கந்தையா ஜே. பி.
கொடிநாள் அமைப்பாளர்

வி. எஸ். தங்கவேல்
உதவிப் பணிப்பாளர்,
இந்துசமயத் திணைக்களம்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு—4. 2643

## கெற்பேலி கொலை வழக்கு

### 3 எதிரிகளுக்கும் மரணதண்டனை

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் கெற்பேலி கொலைவழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட மூவருக்கும் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி ஜறுப் எம்:ஜமீல்,மரண தண்டனைவிதித்து தீர்ப்பளிந்தார்.

1977ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் திகதி எஸ். சுப்பிரமணியம், எஸ். இராசதுரை, எஸ். பத்மநாதன் ஆகிய மூவரும் கெற்பேலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவரைக் கொலைசெய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு யாழ் மேல்நீதிமன்றத்தில் ஜூரிமார் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

ஜூரிமார் சுமார் 2 மணித்தியாலம் மந்திராலோசனை செய்தபின்னர் ஏகமனதாக

(8 பக்கம் பார்க்க)

உடனடியாகத் தேவை

மிற்சுபிசி (MITSHUBISI & CO) கம்பனிக்கு பொது வேலைக்கு [General Workers] ஆட்கள் உடன் தேவை.

வெல்டிங் (Welding) அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பத்திரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

குமாரன் டூரிஸ்ட் இன்
67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(2657) தொலைபேசி: 7753

### மணிவாக்கு

என் ஆன்மாவைத்தேடினேன்
அதைக் காணமுடியவில்லை
என்தெய்வத்தைத் தேடினேன்
தெய்வம் தென்படவில்லை
என் சகோதரனைத் தேடினேன்
மூவரையுங் கண்டுகொண்டேன்

— பாபா சாஹேப் ஆம்தே

# நமது நோக்கு

## அகில உலக மத மாநாடுகள்

வருகிற வாரம் ஆரம்பமாகும் சர்வதேச இஸ்லாமிய மகாநாடு தொடக்கம் அடுத்தடுத்து வரவிருக்கும் அகில உலக பௌத்த இந்து மத மாநாடுகள் இலங்கையைப் பெருமைப்படுத்தும் நிகழ்ச்சிகளாகும்.

சர்வதேச அரங்கில் நடைபெறும் கடத்தல் சம்பவங்கள், கோரக் குற்றங்கள் போதைப் பொருட்கள் மோசடி உல்லாசப் பயணத்தால் ஏற்படும் கெடுதிகள் நாட்டின் ஆத்மிகப்பலத்தை அரித்துவரும் வேளையில் பலவீனப்பட்ட 'பட்டறி'க்கு 'சார்ஜ்' கொடுத்த பாங்கில் இத்தகைய மாநாடுகள் திறமையுடன் அமைக்கப்பட்டால் நிச்சயம் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்த வல்லவை.

இலங்கையைப் பொறுத்தளவில் இந்த நம்பிக்கை வீண் போகமாட்டாது. இந்த நாட்டில் உலகின் நான்கு பெரிய சமயங்களை வாழ்க்கை முறையில் அநுசரிக்கும் லட்சக்கணக்கான மக்கள் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வதையிட்டுநாம் மகிழ்ந்து பெருமைப்படவேண்டும்.

அதுமட்டுமல்ல ஒவ்வொரு சமயத்தினரும்—பௌத்தர்கள், இந்துக்கள், கிறீத்தவர், இஸ்லாமியர் தங்கள் கலாசாரத்தின் அழியாச் சின்னங்களாக தம்முன்னோர் அளித்த அருஞ்செல்வங்களைப் போற்றிப் பேணும் வாய்ப்புடையவர்கள்.

தத்தம் மதத்துள் சின்னஞ்சிறு பூசல்கள் ஏற்பட்ட போதும்—அது சகஜமே—வேறுசில நாடுகள் போல் மதவேறுபாட்டால் குழப்பங்களும் கலவரங்களும் இலங்கையில் இடம்பெறுவதில்லை என்பது இந்நாட்டு மக்களின் நற்பாக்கியமாகும்.

எனவே இவ்வரலாற்றுப் பெருமை பெரும் சர்வதேச மாநாடுகளின் நிகழ்ச்சிகள் பொதுமக்கள் யாவருக்கும் பயன்படுமளவில் ஒழுங்குகள் திறம்பட அமைய வேண்டுமென்பது எமது பெருவிருப்பம்.

மனிதனின் ஆத்மீக வாழ்வை வளம் பெறச் செய்வதே சமயத்தின் பெருநோக்கம்; அதனை விடுத்து மதங்களுக்குள்ளேயோ அல்லது மதங்களுக்கிடையேயோ பிணக்குகள் மலிந்து முற்றி நாட்டின் தேசிய வாழ்வுக்கு குந்தகம் விளைப்பதானல் நாம் குளத்தைக்கிண்டி குளிக்கப்போய் சேற்றைப் பூசினவர்களாவோம்.

ஒவ்வொரு மாநாடும் தந்தம் சமயத்தின் பெருநோக்கையும் அதற்கமைந்த வாழ்க்கை முறையையும் இன்றைய உலகை மையமாக வைத்து விளக்கமளிப்பதும், மற்றைய சமயங்களுடன் தத்துவரீதியாக இணைக்கமுடியும் மூலக் கருத்துக்களை ஆராய்வதும் முக்கியமென்பதை வற்புறுத்துகின்றோம்.

இதனை ஒட்டிய கருத்தை தத்துவமேதை டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் பின்வருமாறு விளக்குகின்ருர்:

''இறையுணர்வு, நம் கண்கள் கண்டுணரக்கூடும் வண்ணம் பலநிற ஒளிகளாகச் சிதறி வெளிப்படுகின்றது. பல்வேறு சமய ஒழுகலாறுகளும், ஒப்பற்ற ஒரு பரம்பொருளையே வெவ்வேறு வடிவங்களிற் கண்டு அணிசெய்கின்றன''

இந்துமதத்தின் ஆன்மஞான ஒளி, பௌத்த மதத்தின் சிறந்த கருணைத்திறம், கிறிஸ்தவ மதத்தின் தெய்விக அன்புக்காட்சி, இஸ்லாமிய மதத்தின் இறையருள் தலைப்பாடு—இவையெல்லாம் ஆன்மீக வாழ்வின் பல்வேறு கூறுகளையே புலப்படுத்துகின்றன.

சமய உணர்வு தளர்ச்சியடையும் காலம் இது. அதேசமயம் விஞ்ஞான உணர்வின் அரைகுறைத் தாக்கத்தால், கடவுள் என்று ஒன்று உண்டா என்ற பயனற்ற வீண் விவாதங்களுக்கும் குறைவில்லை. ஆழமற்ற விஞ்ஞான அறிவும், போலி வாதங்களும் மூலாதாரமான சமயநெறிகளை அசைக்கும் ஆற்றல் அற்றவை.

சர்வதேச சமயமாநாடுகளின் ஆய்வுரைகளிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகளிலும் உருப்படியாகக் கருதப்படும் விடயங்கள் உலகம்போற்றும் அருளாசிரியர்களின் உண்மை வரலாறுகள். அப் பெருமக்களின் பல்வேறு விவரங்கள் இன்றைய இளைஞர் உலகம் அறியாத புதுமைகள்.

நாம் எந்த மொழியைப் பேசினாலும் எந்த மதத்தைப் பின்பற்றினாலும் மொழியும், மதமும் அவற்றில் உருவான பண்பாட்டு வாழ்க்கையும் நாட்டின் தேசிய வாழ்க்கையின் இரு கண்களாகக் கொண்டு ஐக்கியத்தையும் சகோதரத்துவத்தையும் அன்றாட வாழ்க்கையில் அதிகரிக்க உதவும் கருவிகளாகக் கருதும் மனப்போக்கு பெரிதும் வேண்டப்படுகிறது.

அமெரிக்க கவிஞர் லாங்ஃபெல்லோ [H W. Longfellow] ''காலம் என்னும் மணலில் சான்றோர்கள் பதித்துவிட்டுச் செல்லும் அவர்களின் அடிச்சுவடுகள் பிறவி என்னும் கடலில் வழிதவறித் தடுமாறி நிற்கும் சகோதரர்களுக்குத் தைரியம் அளிக்கும்'' என்று பாடியிருக்கிருர்.

இலங்கை மக்கள் காணவிருக்கும் இம்மூன்று மாநாடுகளும் கொழும்பு மாநகருக்கு மட்டும் ஒளி ஊட்டுவதோடு நிற்காமல் கிராமங்களில் வதியும் பொதுமக்கள் மத்தியில் எழுச்சியை உருப்படுத்த வேண்டும்.

கிளிநொச்சி தனிமாவட்டம்:

## "கோரிக்கை நியாயபூர்வமாக இருந்தால் அனைவரும் அரசை கோரவேண்டும்"

### விசாரணைக்குழுத் தலைவர் 'நவம்' உரை

(பச்சிலைப்பள்ளி)

கிளிநொச்சித் தொகுதியை தனிமாவட்டமாக்கும்படி கோருவதற்கு அங்குள்ள பிரச்சினைகள் என்ன? அப் பிரச்சினைகளை தனி மாவட்டத்தைத் தவிர்ந்த வேறு வழியில் தீர்க்கலாமா? என்பதைப்பற்றி ஆராயவே, கூட்டணித் தலைமைப்பீடம் விசாரணைக் குழுவினை அமைத்தது. பொதுமக்களின் வாக்குமூலங்களை கூட்டணி செயற்குழு ஆராய்ந்து முடிவெடுக்கும்.

இவ்வாறு கிளிநொச்சி தனி மாவட்ட கூட்டணி விசாரணை குழுவின் தலைவரான சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், சாட்சியமளிக்க வந்தோர் முன்னிலையில் உரையாற்றும்போது கூறினர்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது, 'கல்முனையைத் தனி மாவட்டமாக்கும்படி, நாம் அரசாங்கத்தை ஏகோபித்த முறையில் கேட்டு வருகிறோம். அதேபோல் இக் கோரிக்கையையும் நியாயபூர்வமானதாக இருந்தால், நாம் அனைவருமே அதனை அரசாங்கத்தைக் கோரவேண்டும். அத்துடன் தனி மாவட்டத்தின் எல்லையையும் நாம் எடுத்துக் கூறவேண்டும். வெற்றிலைக்கேணியும், கோயில் வயலும் பின்தங்கிய பகுதியாக இருக்கும்போது வெற்றிலைக்கேணியை யாழ் மாவட்டத்துடனும், கோயில் வயலை கிளிநொச்சி மாவட்டத்துடனும் சேர்க்கச் சொல்லுகிறீர்கள் என எம்மை அரசாங்கம் கேட்கலாம். அதேபோல எழுதுமட்டுவாளும், முகமாலையும் ஒரே மாதிரியான இடங்களாக இருக்கும்போது அதனை ஏன் வெவ்வேறு மாவட்டத்துடன் சேர்க்கச் சொல்லுகிறீர்கள்? எனவும் அரசாங்கம் கேட்கலாம் எனவே அதற்கெல்லாம் நாம் பதிலளிக்கக் கூடியதாக இருக்கவேண்டும். எனவே விசாரணைக்குழு முன் உரையாற்றுகிறவர்கள் எல்லைகளைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். எல்லைதான் முக்கியமானது.

புளக்கத்தில் ஐந்து ரூபா நோட்டுகள்:

## அச்சடித்த பிரிட்டிஷ் கம்பெனியே நம்பமுடியாமல் தடுமாறுகிறது!

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கிக்கு பணத்தாள்களை அச்சிட்டு வழங்கும் பிரிட்டிஷ் அச்சுக் கம்பனியான 'பிராட்பியூரி வில்கின்சன்' கம்பனியே உண்மையான பணத்தாள் என்று நம்புமளவிற்கு போலி ஐந்து ரூபாத் தாள்கள் புளக்கத்தில் விடப்பட்டிருப்பதாக குற்றப் புலனாய்வுப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பாணந்துறை, களுத்துறை, மத்துகம ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனையொன்றிலேயே மூன்று ஐந்து ரூபா போலித்தாள்கள் புளக்கத்திலிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நோட்டுக்களைக் கைப்பற்றிய சி. ஐ. டி, பொலிசார், இவற்றில் ஒன்றை இலங்கை மத்திய வங்கிக்கு பணத்தாள்களை அச்சிட்டுக் கொடுக்கும் 'பிராட்பியூரி வில்கின்சன்' கம்பனிக்கு அனுப்பி வைத்தனர். கம்பனியினர் அனுப்பப்பட்ட ஐந்து ரூபா தாள் உண்மையான தொன்றென முதலில் நம்பினர். பின்னர் நுணுக்கமாக பரிசோதித்தபோதே மேற்படி ஐந்து ரூபா தாளின் இருபக்கங்களும் வெவ்வேருக அச்சடிக்கப்பட்டு நல்ல பிடிப்பு மிக்க பசையால் ஒட்டப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது

புளக்கத்திலிருந்து வரும் போலி ஐந்து ரூபா தாள்கள் உருவமைப்பில் உண்மையான தாளையே ஒத்திருக்கின்றன. ஆனல் ஒரு தாளில் வெளியாகியிருக்கும் தொடரிலக்கம் ஏனையவற்றிலும் காணப்படுவதன் மூலமே வேறுபாடுதென்படுகின்றது என்று இதுபற்றி தெரிவித்த அதிகாரி ஒருவர் விளக்கினர்.

இத்தகைய போலி ஐந்து ரூபா நோட்டுக்கள் புளக்கத்திலிருப்பது குறித்து பொதுமக்கள் விழிப்பாக இருக்க வேண்டுமென்றும் போலி நோட்டுக்கள் எனச் சந்தேகிக்கும் பட்சத்தில் சி. ஐ. டி. பொலிசாரை அணுகும்படியும் கேட்கப்பட்டுள்ளனர். (கி)

## திருமுறை மன்றத்தினருக்கு தமிழ்நாட்டில் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

யாழ். திருமுறை மன்றத்தினர், தமிழ் நாட்டில் பாராட்டுப் பெற்றுள்ளனர். தென்னிந்திய தல யாத்திரையை மேற்கொண்டு அங்கு பல புண்ணிய தலங்களையும் தரிசித்த யாழ். திருமுறை மன்றத்தினர், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் சென்று மகாசிவராத்திரி விழாவில் கலந்து கொண்டனர். ஸ்ரீகாசிமட அதிபர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் யாழ். திருமுறை மன்றத்தின் சேவைகளை வெகுவாகப்பாராட்டி, குறிப்பாக யாழ். திருமுறை மன்ற அமைப்பாளர் திரு. கி. கிருஷ்ணமூர்த்தியின் சமயப்பணிகளைப் பாராட்டி பத்திரமும் வழங்கி கௌரவித்தார்கள். இம்மன்றத்தினரின் மகாசிவராத்திரி வெளியீடான திருமறைக்காட்சி திருப்பதிகம் இலவச பிரதியை சுவாமி அவர்கள் வெளியிட்டு வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து யாழ். திருமுறை மன்றச் செயலாளர் ''பண்ணிசை வேந்தன்'' இ, திருஞான சம்பந்தனைப் பாராட்டி தேவாரஇசை மணி என்ற கௌரவப்பட்டத்தையும் வழங்கி வாழ்த்தினார்கள்.

பல தளங்களை தரிசித்து பல மதப் பெரியார்களிடம் ஆசி பெற்று திருமுறைமன்றத்தினர் நேற்றுமுன்தினம் நாடு திரும்பினர்.

## பொங்கல் விழா ஆலோசனை

(சாவகச்சேரி).

ஏப்ரல் 6ம் திகதி நடைபெறவிருக்கும் புளியம்பொக்கணை நாகதம்பிரான் பொங்கல்விழாவுக்குரிய ஏற்பாடுகளை ஆலய திருப்பணிச்சபையினர் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் க.சுப்பிரமணியம் தலைமையில் கூடி ஆலோசனை நடத்தினர்.

இக்கூட்டத்தில் இவ்வாலயத்தின் போஷகரான கிளிநொச்சி எம். பி. திரு வீ ஆனந்தசங்கரியும் கலந்து கொண்டார். (கு)

வெள்ளைக்கடற்கரை பள்ளிவாசல்:

## குறைகளை நிவர்த்திசெய்ய புதிய சபை அமைப்பு

(யாழ்ப்பாணம்)

''பல்லாண்டுகளாக வெள்ளைக்கடற்கரைப் பள்ளிவாசல் தனிநபர் கையிலிருத்தது மீண்டும் பரிபாலனர்களின் கைக்கு வந்துள்ளது' பரிபாலகர்கள் யாழ். நகரிலிருந்து கடமையாற்றுவதால் சில குறைகள் ஏற்பட்டன. அக்குறைகள் விரைவில் நிவர்த்தியாகும்''

வெள்ளைக் கடற்கரை விழாவில் பேஷ் இமாம் மௌலவி கே. முஹியதீன் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ''இக் குறைகளைக் களைந்தெறிந்து நற்பணி புரியும் எண்ணத்துடன் ஜமாஅத் சபை ஒன்று உருவாக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் எம்முடன் இணைந்து செயல்பட வருகை தந்துள்ள எம். ஜிஷாகுல் எமக்கு ஒரு வரப்பிரசாதமாக செயலாளர் பதவியை ஏற்க முன்வந்துள்ளார். அவர் சேவைக்காகதன் பொன்னுன நேரத்தை தியாகம் செய்துள்ளார். அன்னுரின் சேவை மனப்பான்மை எம்மத்தியிலுள்ள வேற்றுமைகளை மாற்றி ஒற்றுமைப்படுத்தியது''

## கன்னியாகுமரியில் பதட்ட நிலை நீடிக்கிறது

சென்னை மார்ச் 24

''கன்யா குமரி மாவட்டத்தில் தொடர்ந்தும் பதட்டநிலை நிலவிவருகிறது. இதனை நீக்க தமிழ்நாடு அரசு தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு எடுக்கத் தவறினல் அங்கு மீண்டும் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன''.

இவ்வாறு கன்யாகுமரி மாவட்டத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு கலவரப்பகுதிகளைம் பார்வையிட்டுத் திரும்

(7ம் பக்கம் பார்க்க)

# ராணுவபலத்தை அதிகரிப்பது நாடுகளை ஆக்கிரமிப்பதற்கல்ல

## பாக். ஜனாதிபதி கூறுகிறார்

இஸ்லாமாபாத், மார்ச் 24
''பாகிஸ்தானின் இராணுவ பலத்தை அதிகரிக்கின்ற போதிலும், எந்த ஒரு நாட்டையும் ஆக்கிரமிக்கும் நோக்கம் அதற்கு இல்லை''

மேற்கண்டவாறு பாகிஸ்தான் ஜனாதிபதி ஜனாப் ஷியாவுல் ஹக் பாகிஸ்தானின் தேசியதினத்தை முன்னிட்டு ராவல்பிண்டியில் இன்று நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டபின்னர் உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

''இன்னொரு நாட்டை ஆக்கிரமிப்பது இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு முரணானதாகும். பாகிஸ்தான் இஸ்லாமிய கோட்பாடுகளை தொடர்ந்தும் பேணிப் பாதுகாத்து வருகின்றது.

''நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துமுகமாகவே அமெரிக்காவிடமிருந்து பாகிஸ்தான் 320 கோடி டாலர் பெறுமதியான நவீனஆயுதங்களைக் கொள்வனவுசெய்துள்ளது'' என்றார்.

சீன உதவி பிரதமமந்திரியும் இவ் இராணுவ அணிவகுப்பில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. [வெ]

# ஆலய வீதியில் முதலுதவி சிகிச்சை நிலையம்

[பண்டத்தரிப்பு]

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கொடியேற்றத்தினமான எதிர்வரும் 29ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் உற்சவ காலம் முடியும் வரை ஆலய வீதியில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் முதலுதவி சிகிச்சை முகாம் இயங்கவுள்ளது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ.மகாதேவா மருதடி விநாயகர் ஆலய முகாமையாளர் ஆகியோர் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பியுடன் தொடர்பு கொண்டு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து மேற்படி முதலுதவிச் சிகிச்சை முகாம் ஆலய வீதியில் நிறுவப்படவுள்ளது.

29ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மேற்படி உற்சவம் புத்தாண்டு தினமான ஏப்ரல் மாதம் 14ம் திகதி இரதோற்சவத்துடனும் மறுநாள் தீர்த்த உற்சவத்துடனும் பூர்த்தி பெறும்.

## தற்கொலை

புதுடில்லி, மார்ச் 24
மகாராஷ்டிர மாநில மேலவை உறுப்பினர் திரு. அண்ணாசாமி பட்டேல் தன்னைத் தானே சுட்டுக்கொன்றதாக பொலிசார் தெரிவித்தனர். (வெ)

# இஸ்ரேல் அரசு பதவி விலகாது

டெல்அவிவ், மார்ச் 24
இஸ்ரேலிய அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாதீர்மானத்தினால் அமைச்சரவை ராஜினாமா செய்யாது என அரசு அறிவித்துள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக 58 வாக்குகளும் எதிராகவும் 58 வாக்குகளும் கிடைத்தன.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை காரணமாக ராஜினாமா இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# கௌதமாலாவில் ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது

லண்டன், மார்ச் 24
கௌதமாலாவில் இராணுவத்தினர் ஆட்சியை பொறுப்பேற்றுள்ளனர். இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று திடீர் புரட்சிமூலம் ஆட்சியை கைப்பற்றியது.

ஜனாதிபதி லுக்கர்கஸ்சிப்ருக்கு என்ன நடந்ததென்பது பற்றி தெரிவிக்கப்படவில்லை. அண்மையில் புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டு ஜூலையில் பதவியேற்கவிருந்தவரின் நிலைபற்றியும் தெரியவில்லை.

இராணுவத்தினர் தேசிய வானொலிநிலையத்தையும் முக்கிய அரசாங்க அலுவலகங்களையும் கைப்பற்றியுள்ளனர். தொடர்ந்து பல இடங்களில் சண்டை நடப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஊழலில் இருந்தும் மக்களைக் காப்பாற்றவே இராணுவ நிர்வாகத்தை பொறுப்பேற்றதாக வானொலி அறிவித்துள்ளது. (க)

# சென்னையில் பாரதிக்கு சிலை தமிழக அரசு நிறுவும்

சென்னை, மார்ச் 24
சென்னை நகரின் முக்கிய இடத்தில் பாரதியாரின் சிலை ஒன்று நிறுவப்படவிருக்கிறது. இச்சிலையை தமிழ்நாடு அரசு வழங்கும்.

பாரதி நூற்றாண்டுவிழா கமிட்டி மேற்கண்டசிபார்சை செய்துள்ளது.

சென்னையிலுள்ள சாலை ஒன்றுக்கு பாரதியின் பெயரைச் சூட்டவேண்டுமென்றும், பாரதி தபால்தலை ஒன்றும் வெளியிடப்படவேண்டும் என்றும் சிபார்சுசெய்யப்பட்டுள்ளது.

பாரதியாரின் கவிதைகளை ஆங்கிலம், மற்றும் மாநில மொழிகளில் வெளியிடவேண்டும் என்றும் அவரின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக எல்லா மொழிகளிலும் வெளியிடவேண்டும் என்றும் சிபார்சு செய்ப்பட்டுள்ளது. பாரதிபாடல்களைக கொண்ட இசைத்தட்டுஒன்றை வெளியிடுவதென்றும் சிபார்சுசெய்யப்பட்டது.

## பஸ் விபத்து 29 பேர் பலி

புதுடில்லி, மார் 24
ஹிமாலயப் பிரதேசத்தில் உள்ள மண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற பஸ்விபத்தொன்றில் 29 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது. இவ் விபத்தில் 21பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பஸ் பள்ளத்தில் வீழ்ந்தபோதே இவ் விபத்து . இடம் பெற்றதாக கூறப்பட்டது. [வெ]

## மோதல் 30 பேர் காயம்

சென்னை, மார்ச் 24
சென்னையிலுள்ள தாண்டல் கிராமத்தில் இரு பிரிவினர்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் 30 பேர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் 15 பேரின் நிலைமை ஆபத்தானதாகவுள்ளதாகவும் கூறப்பட்டது. (வெ)

யாழ். மாவட்டத்தில்

# மின்சார தடையினால் விவசாயிகள் பாதிப்பு

### நல்லூர் எம். பி.

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் மின்சார விநியோகம் தடைட்பட்டுள்ளதால் இதை நம்பி விவசாயம் செய்யும் விவசாயிகள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். மின்விநியோகம் தடைபடுவதற்கு மின்மானித்தட்டுப்பாடே காரணம்''

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் யாழ்.மாவட்ட அபிவிருத்திசபையின் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் யாழ். அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், சபை முதலாவது அங்கத்தவருமான திரு. எஸ். நாகராசா தலைமையில் நேற்றுமுன் தினம் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில், ''மின்மானியை இறக்குமதி செய்வதை அரசாங்க ஸ்தாபனங்கள் நிறுத்திவிட்டன; மின்மானிகளுக்குத் தட்டுப்படு ஏற்படாமல், கட்டுப்பாடான முறையிலென்றாலுங் விவசாயிகளின் நன்மை கருதி இறக்குமதி செய்யவேண்டும்'' என்றார்.

திரு.ஜே.அழகையா பேசுகையில் கூறியதாவது: யாழ்.

[6ம் பக்கம் பார்க்க]

# ''எம். பி. க்கள் காவலில் இருந்ததால் மக்களின் ஆதரவுகிடைத்தது''

## யாழ். அபிவிருத்திசபைத் தேர்தல் ரிட்மனு விசாரணையில் வாதம்

(கொழும்பு)
''எதிர்க்கட்சித் தலைவரும், மற்றும் சில தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்களும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டதனால் அக்கட்சிக்கு பொதுமக்களின் அனுதாப ஆதரவு ஏற்படும் நிலைமை யாழ். மாவட்ட அபிவிருத் சபைத்தேர்தலில் இருந்தது. கட்சிகள் உண்மையான பலத்தைக் காட்டக்கூடியதாக அத்தேர்தல் இருக்கவில்லை''.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலை ரத்துச்செய் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 'ரிட்' மனு மீதான விசாரணையில் நேற்று மனுதாரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. எம். சோமசுந்தரம் தமது வாதத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் திரு. ஒ. எஸ். எம். செனவிரத்ன, திரு. ஜே. அபேரத்ன ஆகியோர் முன்னிலையில் இம்மனுமீதான விசாரணை நேற்று ஆரம்பமானது.

திரு. இராஜராஜேஸ்வரன் தங்சராஜா இம்மனு வைத் தாக்கல் செய்திருந்தார் மனுவில் சட்டமா அதிபர் தேர்தல் ஆணையாளர் முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தமிழ்க்காங்கிரஸ் செயலாளர் திரு. குமார்பொன்னம்பலம், ஐ. தே. க. செயலாளர் திரு. ஹர்ஷா அபேயவர்த்தன ஐ. தே. க. யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு. எம். பி. சந்திரசேகரம், திரு. சி. குமாரசூரியர், திரு. ஜே. அன்ரனி, மற்றும் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்களுமாக 19 பேர் பிரதிவாதிகளாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 18வது பிரதிவாதியான திரு. ஜே அன்ரனி மனுதாருக்கு தாம் ஆதரவு அளிப்பதாக நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சட்டமா அதிபர் தேர்தல் ஆணையாளர் திரு.யோகேந்திர துரைசுவாமிஆகியோர்சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் திரு. கே. எம். எம். பி. குலதுங்கவும் ஏனையோர் சார்பில் சட்டத்தரணி திரு. வி. எஸ். ஏ. புள்ளநாயகமும் ஆஜராகியிருந்தார்.

திரு. சோமசுந்தரம் தமது வாதத்தில் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தின் 436 வாக்களிப்பு நிலையங்களில் 5 நிலையங்கள் மாத்திரம் தான் காலை 7 மணிக்கு திறக்கப்பட்டன. இது தேர்தலின் தத்துவத்தையே மீறியதாக இருக்கிறது. தேர்தல் நடந்தவேளை அவசரகாலச்சட்டம் அமுலிலிருந்தது. ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்த 156 தேர்தல் உத்தியோகத்தர்களை கோர்ணல் தர்மபால மாற்றி குருநாகலிருந்து உத்தியோகத்தர்களாக அழைத்துவரப்பட்டனர். இவர்கள் சிங்களம்மாத்திரமே தெரிந்திருந்தனர். அத்துடன் சிலர் கல்வித்தகைமையும் அற்றவர்களாகவிருந்தனர். தேர்தல்உத்தியோகத்தர்களுக்கான பயிற்சியும் இவர்களுக்கு அளிக்கப்படவில்லை.

மேலும் யாழ்ப்பாணத்தில் இரு கான்ஸ்டபிள்கள் சுடப்பட்டதையடுத்து அப்போது மோசமான ஒரு சூழல் நிலவிக்கொண்டிருந்தது. மக்கள் பீதியடைந்திருந்தனர். ஊரடங்கு அமுலிலிருந்தது. நல்லூர் எம். பி. யின் வீட்டு வராந்தாவிலேயேதேர்தலன்று அதிகாலை இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். எதிர்க்கட்சித்தலைவரும் மற்றையோரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதை ஆட்சேபித்து ஹர்த்தால் நடத்த கூட்டணியும் தமிழ்க் காங்கிரசும் கூட்டு பிரசுரங்களை வெளியிட்டிருந்தன. இவை அனைத்தும் ஒரு கட்சிக்கு ஆதரவாகவும் கட்சிகள் தமது உண்மையான பலத்தைக் காட்டமுடியாத நிலைமையுமே தோற்றுவித்திருந்தன.

அபிவிருத்தி சபைத்தேர்தல் சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்ய வாய்ப்பில்லாததால் உள்ளூராட்சி தேர்தல்கள் சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த திரு. சோமசுந்தரம், திரு. அமிர்தலிங்கம், திரு. துரைசாமி ஆகியோர் பதில்மனு தாக்கல் செய்யவில்லை என்றும் திரு. நடராசாவின் பதில் மனு முரண்பாடாகவிருந்தாகவும் எனவே குழப்பமான நிலைமைகளில் நடந்த இத்தேர்தலை தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் கோரினார். விசாரணை இன்று தொடர்ந்து நடைபெறும். [இ—ம]

## பாரதத் திருவிழா

லண்டன், மார்ச் 24
''பாரதத்திருவிழா பிரிட்டிஷ் — பாரத உறவுக்கு புதிய திருப்பத்தை அளிக்கும்'' என்று இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி லண்டனில் நடைபெற்று வரும் பாரதத் திருவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

இத்திருவிழாவையொட்டி இடம்பெற்ற திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி, திரு. ரவி சங்கர் ஆகியோரின் இசை நிகழ்ச்சிகளை பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தட்சரும், இளவரசர் சாள்சும் ரசித்துப் பாராட்டினார்கள். (வெ)

## தவக்கால நற்சிந்தனை



மனிதன் தன்னைத்தானே முழுதும் மேற்கொள்ளவும், தன் பற்றுதல் யாவையும் சர்வேசுரன்பேரில் நாடச் செய்யவும் அறிவதற்கு முந்தி, நெடுங்காலம் தனக்குள்ளாகக் கடினமாய்ப் போர்புரியக் கடவான். மனிதன் தன்னைத்தான் நம்பியிருக்கும்போது, மனுஷ ஆறுதல்களை எளிதாய் நாடுகிறான். ஆனால் கிறிஸ்து நாதரை மெய்யாகவே நேசித்துப் புண்ணியங்களைச் சம்பாதிக்கப் பிரயாசைப்படுகிறவன் அவ்வித ஆறுதல்களை ஆவலோடு அபேட்சிக்கிறதில்லை. அவ்வித இன்பங்களை விட கிறீஸ்துநாதரைப்பற்றிக் கடும் பிரயாசைகளுக்கும் கொடிய வருத்தங்களுக்கும் உட்பட அதிகமாய் ஆசிக்கிறான்.

(கிறிஸ்துநாதர் அனுசாரம்)

## ஊர்காவல்படை பிரதி அமைச்சர் பொறுப்பில்

(கொழும்பு)

ஊர்க்காவல் படைத்திட்டத்திற்குப் பொறுப்பான பிரதி பாதுகாப்பு அமைச்சராக, எகலியகொட எம். பி. திரு. மெர்வின் குலரத்ன நேற்று ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். [க]

## சர்வதேச அளவில் பாரதிவிழா

புதுடில்லி மார்ச், 24

பாரதியின் நூற்றாண்டு விழாவை, தேசிய அளவிலும் சர்வதேச ரீதியிலும் கொண்டாட மத்தியஅரசு தீர்மானித்துள்ளது. [க]

## கம்பன் விழாவில் இன்று

[யாழ்ப்பாணம்]

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றுவரும் அகில இலங்கை கம்பன் கழகத்தின் கம்பன் விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை கலாநிதி அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

திரு.பொ. ச. குமாரசுவாமி வாழ்த்துரை வழங்குவார். முஅறம்காத்துநின்றமுறைமையைச் சொல்லவந்தோம்' என்றபொருளில் கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை தலைமையில் கவியரங்கம் நடைபெறும், இவ்வரங்கில் வித்துவான் சி. ஆறுமுகம், திரு. சோ. பத்மநாதன், திரு. தமிழ்மாறன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இறுதியாக ''வழி வழி பாரதி'' என்ற பொருளில் பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (கி)

## வடமராட்சியில் ....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ரல் மாதம் 22ம் திகதிக்குப் பின்னர் எவரும் சேர்த்துச் கொள்ளப்படமாட்டார்கள்.

'நிஸ்கோ' பிரிவில் சேர்ந்து கொண்டவர்களுக்கு புதியபயிற்சித்திட்டம் ஒன்று முதலில் உருவாக்கிக் கொடுக்கப்படவுள்ளது. இப்பயிற்சி முடிந்த பின்னர் அவர்கள் தாமாகவே தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான கடன் வசதிகளும் தகுதிக்கேற்ற முறையில் செய்து கொடுக்கப்படவுள்ளன —என்றார்.





# வானுயர்ந்த இலாபம் பெற லங்கா சீமெந்து

அத்திவாரத்திலிருந்து வானளாவும் உயரத்திற்கு சிமெந்தின் தேவை அதிகரித்துள்ளது. கட்டிட நிர்மாண வேலைகள் பெருமளவில் கூடியிருப்பதால் சமாளிக்கமுடியாதளவுக்கு சிமெந்தின் தேவையும் அதிகரித்துள்ளது.

இதனை முழுமையாக உணர்ந்த இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் என்றுமே விற்பனை செய்யக்கூடிய சிமெந்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக லங்கா சிமெந்து லிமிட்டெட்டை ஆரம்பித்துள்ளது.

இந்த முயற்சியில் சேர்ந்து நீங்களும் பெருமளவு இலாபம்பெற போதிய வாய்ப்பிருக்கிறது

ஒவ்வொன்றும் 10 ரூபா பெறுமதியான 1.2 கோடி. பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. பங்கு வழங்குகையின் மொத்த பெறுமதி 30 கோடி. ரூபா

முதல் ஆண்டிலேயே பங்கிலாபம் பெறும் வாய்ப்புண்டு

**முதலீட்டு நிவாரணமும் வரிச் சலுகைகளும்**

- வரிமதிப்பிடற்குரிய வருமானத்தின் 1/3 பகுதிவரை முதலீட்டு நிவாரணம்
- கம்பெனியின் இலாபங்களின் மீது ஐந்து வருட வரி விடுமுறை
- ஐந்து வருடங்களுக்கு பங்கிலாபங்களுக்கு வரி விலக்கு
- வரி விடுமுறைக்குப் பின்னர் குறைந்த வீத வரி மதிப்பு
- வரி விடுமுறைக்குப் பின்னர் பங்கிலாபங்களின் மீதான வரி நிறுத்திவைக்கப்படமாட்டாது
- வதிவு கம்பெனிகள் பெறும் பங்கிலாபங்களுக்கு வரி இல்லை
- மூலதன இலாபங்களுக்கு வரி இல்லை

பங்கு வழங்குதல் மார்ச் 3 முதல் 1982 ஏப்ரல் 30 வரை

முதலிடு செய்வது பற்றிய விபரங்களைத் தரும் முற்பகர்வின் இலவச பிரதிக்கு இங்கு தரப்பட்டுள்ள கூப்பனை அனுப்பி வையுங்கள்.

நிர்வாக ஆலோசனைப் பிரிவு,
இலங்கை வங்கி, 411, காலி வீதி, கொழும்பு - 3

லங்கா சிமெந்து லிமிட்டெட் பங்கு வழங்குகை மீதான முற்பகர்வின் பிரதியொன்றையும் பங்குகளுக்கான ...........விண்ணப்பப் படிவங்களையும் தயவு செய்து அனுப்பி வையுங்கள்.

பெயர் ..........................................

முகவரி ..........................................

லங்கா சிமெந்து லிமிட்டெட்டுடன் சேர்ந்து உறுதியான எதிர்காலத்தை கட்டியெழுப்புங்கள்

## லங்கா சீமெந்து லிமிட்டெட்

அல்மனர் கட்டிடம், 302, காலி வீதி, கொழும்பு - 4
தொலைபேசி: 589126

கட்டைக்காடு கொலைமுயற்சி வழக்கு:

# 3ம்,7ம் எதிரிகள் கட்டிப்பிடிக்க முதலாம் எதிரி வாளால் வெட்டினர்

## காயமடைந்தவர் சாட்சியம்

[சாவகச்சேரி]

''சம்பவதினம் சகோதரி வீட்டிலிருந்து நான் புறப்பட்டுச் சென்றபோது 3ம், 7ம் எதிரிகள் என்னைகட்டிப்பிடிக்க 1ம் எதிரி வாளால் வெட்டினர்.''

கட்டைக்காடு கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த சுவக்கீன் யேசுராசா மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு பளை சுற்று நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்சில் பளைப்பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கட்டைக்காடு என்னுமிடத்தில் அ. தங்கத்துரை, க. கஸ்மீர், ஜே. கிறிஸ்தோப்பிள்ளை, தங்கராசா, எத்தேவிஸ், யேசுராசா ஆகியோர் சுவக்கீன் யேசுராசா என்பவரை வெட்டிக்கொலை செய்ய முயன்றதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகை பாலன் ஆஜரானர். யோகராசா தொடர்ந்து குறிப்பிட்டதாவது:-

''சகோதரி வீட்டிலிருந்து புறப்பட்டு அம்மா வீட்டுக்குப் போகும் வழியில் இந்த எதிரிகள் வந்தார்கள். எதிரிகளில் 3ம்,7ம் எதிரிகள்கட்டிப்பிடிக்க 1ம் எதிரிவாளால்வெட்டினர். நான் கீழே விழுந்துவிட்டேன். மயங்கிய நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டேன். மூன்று நாட்கள் ஆஸ்பத்திரியில் மயங்கிய நிலையில் இருந்தேன்.

சட்டத்தரணி செ. அம்பிகை பாலன் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

சட்டத்தரணி: சென்ற தவணை இந்த மன்றிலிருக்கும் மற்றைய எதிரிகளும் கலைத்துக்கொண்டு வந்ததாக சொன்னீர்?—நான் அப்படிச் சொல்லவில்லை.

சட்: சகோதரன் சுவக்கீன் முத்துராசாவை அன்று சந்தித்தீரா?—சந்திக்கவில்லை.

சட்: உமது சகோதரி ஆரோக்கியத்தை சந்தித்தீரா?—இல்லை.

சட்: அக்கா வீட்டுக்கும் உங்கள் வீட்டிற்கு மிடையில் எவ்வளவு தூரம்?— 30 யார் தூரம்.

சட்: நீர் சத்தம் போட்டிருந்தால் அக்கா வீட்டிற்கு கேட்டிருக்குமா?—ஆம்.

சட்: ஆஸ்பத்திரியில் எத்தனை நாள் இருந்தீர்?—24நாட்கள்.

சட்: அன்றைய தினம் அந்தோனிப்பிள்ளை சவரிமுத்து என்பவர் மண்டாவாள் குத்தி

(7ம் பக்கம் பார்க்க)

வடமராட்சியில்

# இளம் பெண்களுக்கு சுயதொழில் வேலைவாய்ப்பு

(கரவெட்டி)

''வடமராட்சியில் வேலையற்றிருக்கும் இளம் பெண்களுக்கு சுயதொழில் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பயிற்சித்திட்டம் புதிதாக உருவாக்கிக் கொடுக்கப்படவுள்ளது. இதக்கான நடவடிக்கைகளை யாழ். தேசிய இளைஞர் சேவை மன்றம்மேற்கொண்டு வருகின்றது; தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ''நிஸ்கோ'' பிரிவில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளவர்களுக்கே இந்த வாய்ப்புக் கிடைக்கவுள்ளது''

இவ்வாறு யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற முகாமையாளர் செல்வி எஸ். மகேஸ்வரி கரவெட்டி மத்தொனி கிராம மகளிர் முன்னேற்றச் சங்கத்தில் 'நிஸ்கோ' பிரிவிற்கான அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்ளும் வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

முகாமையாளர் செல்விமகேஸ்வரி தொடர்ந்து பேசுகையில், ''யாழ். தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் 'நிஸ்கோ' பிரிவு ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் அதில் சேருவதற்கு 15 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடைய இளைஞர்கள், யுவதிகள் அதிகம்பேர் முன்வந்துள்ளனர். யாழ். 'நிஸ்கோ' பிரிவில் ஏப்

(7ம் பக்கம் பார்க்க)

சரசாலை திருட்டுவழக்கு:

# 'புளியங்காயினுல் இருபக்க பிள்ளைகளும் சண்டைபிடித்தனர்'

(சாவகச்சேரி)

''சம்பவதினம் நான் எனது வீட்டிலிருந்து மில்லுக்குப் போவதற்குப் புறப்பட்டேன். இரத்தினபூபதி வீட்டுப் புளியங்காயினுல் இரு பக்கத்துப் பிள்ளைகளும் சண்டைபிடிக்க ஆரம்பித்தார்கள். நான் குழந்தைபிள்ளைகளதுசண்டை பெரியவர்கள் சண்டையாக வந்துவிடுமே எனக் கூறினேன்''

சரசாலை திருட்டு வழக்கில் சாட்சியமளிக்கையில் வைரவன் சின்னப்பு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் இவ் விசாரணை ஆரம்பமானது. இவ் வழக்கில் சரசாலையைச் சேர்ந்த யோ. இரத்தினபூபதி என்பவரது வீட்டில் சரசாலையைச்சேர்ந்த அரியநாயகமும் அவர் மகன் பாலச்சந்திரனும் 550 ரூபா பெறுமதியுள்ள துணிகள் அடங்கிய சூட்கேசை அபகரித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சி. பொ. மயில்வாகனன் ஆஜரானர்.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி திருமதி நளினி கணேசயோகன் ஆஜரானர்.

வைரவன் சின்னப்புதொடர்ந்து கூறியதாவது: சற்குணவதி வீட்டின் புளியின் ஒரு கொப்பு சங்கரப்பிள்ளை சரவணமுத்து வளவுக்குள் போய் பிள்ளைகள் புளியங்காய் பிடுங்கியதிலிருந்து இந்தச் சண்டை உண்டானது.

பாலச்சந்திரன், ஜெயச்சந்திரன் என்பவர்களும் சற்குணவதியும் பேச்சுப்பட்டார்கள்.

(7ம் பக்கம் பார்க்க)


TAL 1369

"ஸ்டொப்" இளட்ச் & பிறேக் புளுயிட்

மலிவான விலைக்கு
போதியளவு
பெற்றுக்கொள்ளலாம்

STOP
Hydraulic
BRAKE
& CLUTCH
FLUID

விநியோகஸ்தர்கள்:-
லிமிடெட்
டீமோ இண்டஸ்றீஸ்
65, ஜேத்தவன வீதி,
கொழும்பு - 14.
தொலைபேசி:23702-4, 34751




CHEMANEX
தயாரிப்பு:
கெமனெக்ஸ் லிமிடெட்

450 மி. லீட்டர் ரூபா 24-52 சதம்
225 மி. லீட்டர் ரூபா 13-50 சதம்


# நயினுதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன்தேவஸ்தானம்

## 1-4-81 முதல் 31-12-81 வரையுமுள்ள வருமான செலவுக் கணக்கு அறிக்கை

வரவுகள்

| | | | |
|---|---|---|---|
| கையிருப்பு 1—4—81ல் | | | |
| வங்கி இருப்பு 1—4—81ல் | | | |
| யாழ் வர்த்தகவங்கியில் | | | |
| சேமிப்புக்கணக்கு | 1370ம் இலக்கபுத்தகப்படி | 44806.73 | |
| ,, | 2844 | 47.16 | |
| ,, (மஞ்சத்திருப்பணி) | 2038ம் | 2240.86 | |
| ,, | 2080ம் | 126.87 | 47221.62 |
| ,, நிலையானவைப்புக்கணக்கு | 80J403ம் உறுதிச்சீட்டுப்படி | 132250.00 | |
| ,, | 80 J 404ம் ,, | 8067.25 | |
| (மஞ்சத்திருப்பணி) | 80 J 405ம் ,, | 5157.75 | |
| | 80 J 406ம் ,, | 7365.75 | |
| | 80 J 924ம் ,, | 200000.00 | |
| | 80 J 1099ம் ,, | 115833.33 | |
| | 80 J 1217ம் ,, | 175000.00 | 643674.08 |
| மாசாந்த உண்டியல் வரவு | | | 42834.81 |
| மாசாந்த விஷேடபூசை வரவு | | | 6895.00 |
| அபிஷேகரொக்க வரவு | | | 42103.15 |
| அர்ச்சனை வரவு | | | 96470.02 |
| பூசை ரொக்க வரவு | | | 55749.00 |
| திருநாட்கால உண்டியல் வரவு | | | 32352.66 |
| ,, கடைவாடகை வரவு | | | 19580.00 |
| ,, ஓலையிற் வாடகை வரவு | | | 2190.00 |
| ,, படித்தர வரவு | | | 11925.00 |
| ,, காணிக்கை மேலதிக வரவு | | | 3642.85 |
| திருப்பணி வரவு | | | 97920.95 |
| காணிக்கை வரவு | | | 48942.00 |
| வாக்காளர் சந்தா வரவு | | | 4430.00 |
| லோஞ்சு வரவு | | | 1722.75 |
| தென்னந்தோட்ட வரவு | | | 8481.00 |
| நாணுவித வரவு | | | 6416.50 |
| வட்டி வரவு | | | 172478.27 |
| வங்கிக் கணக்கில் மேலதிக வரவு | | | 5.78 |
| | | ரூபா. | 1,345,035.44 |

செலவுகள்

| | |
|---|---|
| சம்பளம் | 48217.30 |
| மாசாந்த விஷேடபூசைச் செலவு | 8452.14 |
| பூசைச் செலவு | 50331.23 |
| அபிஷேகச் செலவு | 26774.24 |
| திருவிழாச் செலவு | 76364.25 |
| தென்வாசல் இராஜகோபுரச் செலவு | 139263.25 |
| கல்யாணமண்டபச் செலவு | 115490.30 |
| புனருத்தாரணச் செலவு திருப்பணி | 1100.00 |
| பாலஸ்த்தாபனச் செலவு | 4438.05 |
| மின்சார இணைப்புச் செலவு | 10231.50 |
| மின்சாரயந்திர பராபரிப்புச் செலவு | 12270.60 |
| கட்டிடச் செலவு | 23893.84 |
| வீதிதிருத்தச் செலவு | 11843.10 |
| தளபாடத் திருத்தமும் கொள்வனவும் | 6097.60 |
| தேரவாகனம் பராபரிப்புச் செலவு | 8413.30 |
| மோட்டார்லோஞ்சு கொள்வனவும் | — |
| உபகரணங்களும் | 33990.40 |
| மோட்டார் லோஞ்சு சிப்பந்திகள் சம்பளம் | — |
| டீசல், றிப்பியர்ச் செலவு முதலியன | 8172.90 |
| திருமணச் செலவு | 154.95 |
| இஸ்ரேசனெறிச் செலவு அச்சுக்கூலியும் | 7382.10 |
| விளம்பரச் செலவு | 1049.80 |
| பிரயாணச் செலவு | 961.20 |
| தபால், தந்திச் செலவு | 1749.25 |
| வங்கிக் கட்டணம் | 8.87 |
| நாணுவிதச் செலவு | 3647.48 |
| திருஆபரணச் செலவு (செய்கூலி) | 2180.[illegible]5 |
| மஞ்சத்திருப்பணிச் சபை பற்று | 8406.86 |
| தென்னந்தோட்டச் செலவு | 1529.03 |
| கல்மடுக்காணிச் செலவு | 52.50 |
| யாழ். வர்த்தகவங்கியில் நிலையான வைப்பு | |
| 81 J 568ம் இலக்க உறுதிச்சீட்டுப்படி | 712000.00 |
| 81 J 740ம் ,, ,, | 9640.37 |
| 81 J 1842ம் ,, ,, | 8802.07 |
| சேமிப்பு வைப்புக்கணக்கு | |
| யாழ். வர்த்தகவங்கியில் | |
| 1370ம் இலக்க புத்தகப்படி | 1229.07 |
| ,, 2080ம் ,, | 157.30 |
| ,, 2844ம் ,, | 47.16 |
| கையிருப்பு | 663.18 |
| ரூபா. | 1,345,035.44 |

We have examined the above Receipts and Payments account for the Period from 1-4-1981 to 31-12-1981 with the books of account and in our opinion Subject to our report of even date that they are in accordance with the books of account, information and explanations furnished to us.

Jaffna,
12th March, 1982. (2636)

V. M, Perampalam (Sgd.)
Chartered Accountants

வி. சபாநாதன்
தனுதிகாரி
நயினுதீவு, 23-3-1982. ஸ்ரீ நாகபூஷனி அம்மன் தேவஸ்தானம்.

**ஹரன்** யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — பத்மினி
**பேசும் தெய்வம்**

**யாழ். றீகல்**
தினசரி10—30, 2—00, 6—30, 9—30
**தனிமரம்**
துரை

**வெஸ்லி** சாவகச்சேரி
தினசரி: 2.30 6.15 9.15
ரஜனிகாந்த்—சீமா
**காளி**

**சாந்தி** (யாழ்ப்பாணம்) 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன்-சுஜாதா-ஜெய்கணேஷ்-ஸ்ரீபிரியா
**அவள் ஒரு தொடர்கதை**
இந்தியாவிலிருந்து தருவித்த புதிய பிரதி

**வெலிங்டன்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
DRAGON PRINCESS
26.ம் திகதிமுதல்
அஜாசத்தா (தமிழ்)

**லிடோ**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
**பூந்தளிர்**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30, 2.30 6.30, 9.30
**அம்மே மட்ட சமாவென்ன**
(சிங்களம் — கலர்)

**ஸ்ரீதர்** தினசரி: 10:30, 2:00, 4:30, 7.00 9.45
ROGER MOOR in
**THE SPY WHO LOVED ME**
JAMES BOND 007
(Passes and Concessions Suspended)
அதிபயங்கரக் காட்சிகள் நிறைந்தது
வெகு விரைவில்
ரஜனிகாந்த் நடித்த
**பொல்லாதவன்**

கடைசி வாரம்
**ராஜா** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
பிரதாப் சுரேகா
**த க் க ா ர ா**
(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

2-வது ஜனத்திரள் மாதம்
50-வது நாளைத் தாண்டி 100-வது நாளை நோக்கி
வெற்றிகரமாகப் பறந்துகொண்டிருக்கின்றன
உல்லாசப் பறவைகள்
**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
**உல்லாசப் பறவைகள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) தினசரி 10.30, 2.30, 6.30, 9.30
சிவாஜி - ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ - பத்மினி
**குலமா குணமா** புதிய பிரதி
வின்ஸர் ஸ்தாபனத்தாரின் மகத்தான
புதுவருட வெளியீடு
26-03-82 வெள்ளி முதல்
சிவாஜி—எம்.ஜி.ஆர்.—கமல்—ரஜனி—நாகேஷ்
ஸ்ரீபிரியா—கே. ஆர். விஜயா
நடித்த
**நட்சத்திரம்**
(கலர்)


# இன்றைய பலன்

பங்குனி மாதம் 12ம் திகதி
வியாழக்கிழமை
(25—3—82)

மேடம்; கனிவான நினைவுகள் தலைதூக்கும், காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு, கனிவான பேச்சின் மூலம் கடினமான காரியத்தைகூட சாதிப்பீர்கள், சுபதினம்.

இடபம்: சுறுசுறுப்புக் குன்றும் உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள், கொள்கையில் கோணலுடன் கோபமும் அதிகரிக்கும், அமைதி நன்று.

மிதுனம்; கற்றதால் பயன் இன்று கைமேல் கிடைக்கும், நுட்பமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்கள்.

கடகம்; இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும், இனசனம் கூடுவர், புத்திர சுகத்துடன் தொழில் துறையிலும் வெற்றி கிடைக்கும்.

சிங்கம்: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும், சினேகிதர் வழியால் கவலைகள் தோன்றக்கூடும், எதிலும் தாக்க மனப்பாண்மை தோன்றக்கூடும், மனத்திடம் வேண்டும்.

கன்னி: தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறலாம், களஸ்திரவழியால் பொருள்வரவுக்கு இடமுண்டு, புதிய நண்பர்கள் சேருவார்கள்.

துலாம்: சூழ்ச்சிவலை பின்னும் அடுத்துக்கொடுப்பவர்கள் அருகிலேயே இருப்பர், சகோதர வழியால் சஞ்சலமான சம்பவங்கள் இடம்பெறலாம், கடன்பட நேரிடும், மன அடக்கம் வேண்டும்.

விருச்சிகம்: இலட்சிய வாதிகளுக்கு இன்று சிறப்பான தினம், புண்ணிய விருப்புக்கும் இடமுண்டு.

தனு; கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும், எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள், ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும், சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம், கலைஞர்களுக்கு நல்ல தினம்.

மகரம்: பல வழிகளாலும் பணவரவிற்கு இடமுண்டு, பிள்ளைகள் மூலம் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வரவேற்கவேண்டிய நாள்.

கும்பம்; அதிக சிந்தனை சிறிய தலையிடியை கொடுக்கும், வீண் பொருட்களினால் பணம் விரயமாகலாம், அதிக கட்டுப்பாடு அவசியம்

மீனம்: தனதானிய நஷ்டத்துடன் பூமிப்பிணக்கும் தோன்றக்கூடும், கடமையாற்றுமிடத்தில் நிதானம் வேண்டும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## மெய்வல்லுநர் போட்டி

[கரவெட்டி]

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெறும் வருடாந்த மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இம்மாதம் 27ம், 28ம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை தலைமையில் நடைபெறும். இவ் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. எம். தம்பிமுத்து கலந்து கொள்கிறார்.

## கல்லூரி மாடிக் கட்டிடம்

(கரவெட்டி)

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் மாடிக்கட்டிடம் ஒன்று புதிதாக நிறுவப்பட்டுள்ளது. இம்மாடிக் கட்டிடத்தின் முதற்கட்டவேலைகளுக்கென உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் 75,000 ரூபாவை ஒதுக்கிக் கொடுத்தள்ளார். மாடிக்கட்டிடத்திற்கென நிதயுதவிபெற்றுக் கொடுத்ததற்காக கரவெட்டிக் கத்தோலிக்க மக்கள் உடுப்பிட்டி எம். பிக்குபாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளார்கள்.

# முன்னாள் இன்ஸ்பெக்டர்மீது பிடிவிருந்து!

[மாவிட்டபுரம்]

நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறிய முன்னாள் பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர், ஒருவருக்கு பொலிஸ்மா அதிபருக்கூடாக பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது,

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை இரண்டின் மனேஜராக இருந்த கணபதிப்பிள்ளை சிவநேசன் என்பவரது வீட்டினுள் திருடும் நோக்குடன் புகுந்து அவரது வீட்டிலிருந்த 1500ரூபா பெறுமதியான புடவை, துணிவகைகளை திருடியது, சிவநேசனை முறைகேடாக அடைத்து வைத்து கூரையில் கட்டித் தொங்கவிட்டு தடியால் அடித்து பலாத்காரம் பிரயோகித்தது ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் முன்னாள் சுன்னாகம் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயதிலகாமீது இவ் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இவ் வழக்கு விசாரணையில் முன்னரும் மேற்படி உதவி இன்ஸ்பெக்டர் சமூகமளிக்காததால் இரத்தினபுரி பொலிஸ் அதிபர்மூலம் பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இரத்தினபுரி பொலிஸ் அதிபர் அனுப்பியுள்ள அறிக்கையில் தமது பிரிவிலுள்ள எம்பிலிப்பிட்டியாவில் இந்த உதவி இன்ஸ்பெக்டர் கடமையில் இல்லை என்றும் வீட்டிலும் அவர் இல்லை என்றும் தெரிவித்திருந்தார்.

நேற்று முன்தினம் இவ் வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் மீண்டும் எடுக்கப்பட்ட போது மேற்படி உதவி இன்ஸ்பெக்டர்மீது பிரசித்த பிடிவிருந்து பிறப்பிப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

வழக்காளி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் பிரசித்த பிடிவிருந்து பிறப்பித்துவிட்டால் மறுதவணை பற்றியும் குறிப்பிடுவதில்லை. ஆகவே வழக்கு இத்துடன் ஸ்தம்பித்துவிடும் நிலைதான் ஏற்படும். ஆகவே இம்முறை பொலிஸ் மா அதிபர்மூலமாக பிடிவிருந்தை பிறப்பித்து பிரசித்த பிடிவிருந்துபற்றி பின்னர் ஆலோசிக்கலாம் என்றார்.

நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் விசாரணையை மே மாதம் 25ம் திகதிக்கு ஒத்திவைத்து உதவி இன்ஸ்பெக்டருக்கு பொலிஸ் மா அதிபர் மூலமாக பிடிவிருந்தும் பிறப்பித்தார்.

## உப தலைவராக தெரிவு



[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத் தலைவர் திரு. வி. ரி. சிவலிங்கம், அண்மையில் விளையாட்டமைச்சில் நடைபெற்ற இலங்கை அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அச் சங்கத்தின் உபதலைவராகப் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச ஒலிம்பிக்கமிட்டி கடந்த வருடம் நடத்திய உயர்தர மெய்வல்லுநர் பயிற்சிகளில், இலங்கை பிரதிநிதியாக திரு. சிவலிங்கம் பாங்கொக், மலேசியா, ஜப்பான், சிங்கப்பூர். ஆகிய நாடுகளுக்குச் சென்று திரும்பியது குறிப்பிடத்தக்கது.

தேசிய விளையாட்டு வீரர்களுக்கான தெரிவுக்கமிட்டி, தேசிய பயிற்சிக் கமிட்டி ஆகியவற்றில் ஒரு அங்கத்தவராகக் கடமையாற்றும் இவர், இலங்கை அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தின் ஒழுங்கு நடவடிக்கை கமிட்டியின் அங்கத்தவராகவும் உத்தியோகத்தர்கள் கமிட்டியின் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்,

திரு. வி. ரி. சிவலிங்கம் பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஆளணி முகாமையாளராகக் கடமையாற்றிவருகிறார்.

## பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்

(மட்டக்களப்பு)

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 27ந் திகதி யாழ்ப்பாணம் தமிழ்தொழிற்சங்க பணிமனையில் நடைபெறவிருக்கிறது. இவ்வருடாந்த கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த அதிகமான பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் சங்க தலைவர் திரு. நடேசானந்தன் தெரிவித்தார்.

## வட்டு எம். பி. சுகவீனம்

[மாவிட்டபுரம்]

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு திடீர் சுகவீனமுற்று, காங்கேசன் துறையிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கிளிநொச்சி தனிமாவட்டக் கோரிக்கை பற்றி ஆராயச் சென்ற கூட்டணிக் குழுவில் அங்கம் வகித்த திரு. திருநாவுக்கரசு கிளிநொச்சி சென்று திரும்பியபின்னர் திடீர் சுகவீன முற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது,

## மின்சார...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மாநகரசபை 1500 மின்மானி வாங்கியிருக்கும் அதே நேரம் ஏதோ ஒரு தடை காரணமாக மின்மானி போதுமான அளவு இல்லை என்று தெரிவித்துள்ளார்கள். கூ. மொ. வியுடன் தொடர்பு கொண்டு இதற்கு ஆவன செய்யவேண்டும். ''நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள தடங்கல்காரணமாகஇத்தடை ஏற்பட்டிருக்கலாம் மின்னமைப்பு சம்பந்தமாக நிர்வாகம் நடாத்த தனியான ஒருஅமைப்புக் குழு அதிகாரமும் கொண்டு இருக்கவேண்டும்''

திரு. எம். தம்பிமுத்து பேசுகையில்; மின்மானிகள் வீடுகளுக்கு தாமதமாக வழங்கினாலும் விவசாயிகளுக்கு உடனடியாக வழங்கவேண்டும் என்றார்.

தலைவர் திரு. எஸ். நாகராசா இதற்குப் பதிலளித்துப் பேசுகையில் கூறியதாவது: ''மின்மானிகள் கிடைத்தும் கிடைக்காத ஏமாற்ற நிலைக்குள்ளாகியுள்ளோம். துரதிர்ஷ்டவசமாக இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. மின்மானிகள்விரைவில் கிடைப்பதற்கு நடவடுக்கை எடுக்கப்படும்''

மின்சார விநியோகம் சம்பந்தமாக திருவாளர்கள் க. சின்னத்துரை, என். ராஜேந்திரம் ஆகியோரும் உரையாற்றினர். (மா)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நீர்வேலிக் கந்தசுவாமி கோவில் மேற்கு வீதியில், 2½ பரப்புக்காணி, மூன்று அறைகளைக்கொண்ட புதியகல் வீடுவிற்பனைக்குண்டு. காணிக்குத் தனியான பாதையுண்டு. விபரங்கட்கு: சி. சுப்பிரமணியம், நீர்வேலி தெற்கு, நீர்வேலி. 2624

புதிய நாஷனல் ருயின்ரிக்ஸ் 16 அங். டெலிவிசன் விற்பனைக்கு உண்டு. திருமதி முத்தையா, 63, ஆனந்தம் வடலி ரோட், அரியாலை. 2648

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு வியாபார அனுபவத்துடன் ஆங்கில அறிவும் மின்சார உபகரணங்களைப் பற்றிய அறிவுமுள்ள முப்பது வயதுக்குக் குறைந்த ஆண்கள் தேவை. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் உறவினரல்லாத இருவரின் நற்சாட்சிப்பத்திரங்களுடன் 29—03—82 க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2632, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [2632]

சாவகச்சேரி, நல்லூர், சுண்டிக்குளி அல்லது யாழ் மாநகர சபை எல்லைக்குள் நவீன வசதியுள்ள வீடு உடன் வாடகைக்கு தேவை. நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்க. பிறுன்ஸ் டிரக்டர், அன்றீஸ் அன் கம்பனி லிமிட் 50, கண்டி ரோட், நாவற்குளி 2653

யாழ்ப்பாணத்தில் புடைவை ஸ்தாபனம் ஒன்றிற்கு புடைவை வியாபாரத்தில் நன்கு அனுபவமிக்க பங்குதாரர்கள் தேவை. தகுந்த வேதனமும், லாபத்தில் பங்கும் கொடுக்கப்படும். விபரங்களுக்கு விளம்பர இல. 2640 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 2640

## ஆங்கில கல்வி

நவீன உலகத்தினுட் பிரவேசிக்க ஒரே ஒரு திறவுகோல் ஆங்கில அறிவேயாகும். இதை எல்லோருக்கும் உகந்த இலகுவானமுறையில் உச்சரிப்புகளுடனும் மொழிபெயர்ப்புகளுனும் கற்பிக்கின்ற ஒரே ஒரு தமிழ் வார இதழ் 'விளக்கமான ஆங்கிலம்' எங்கும் கிடைக்கும். விலை 2/25. ஆங்கிலம் பிரசுரிப்பாளர்கள், த. பெ. 23, கண்டி. 2520

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கில் வசித்த, காலஞ்சென்ற சின்னையா அருளம்பலம் பெண் பரமேஸ்வரி என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன
நியாயாதிக்கம்
வழ. இல. 3642,
எதிராக
சின்னையா அருளம்பலம்
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்
மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்டமரணசாதன வழக்கு மேலேபெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை என்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளையை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நீதிமன்றக் கட்டளைப்படி,

**தா. குலஞானம்**
பதிவாளர்

1981ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ந் திகதி.

2646

## பயிற்சி

French - German வகுப்புக்கள் ஆரம்பம் 29 - 3 - 82 குறுகிய காலத்தில் இலகு முறையில் கற்பிக்கப்படும். இருபாலாரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, [விவேகானந்த அச்சகம் முன்பாக] 11, மொம்சாக் கட்டிடம் ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். (2635)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் சின்னக்கடைச் சந்தை அமைப்பு வேலைக்கான கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் [சின்னக்கடைச் சந்தை அமைப்பு வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகர சபையுடனே அன்றி வேறு அரசாங்க திணைக்களங்களுடனே ரூபா 500,000/-க்கு குறையாது ஒப்பந்தகாரராகப் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 19.04.82ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 16.04.82ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி வரை கேள்விப் படிவக் கட்டணமாக ரூ. 200/ம் கேள்வி வைப்புப் பணமாக ரூ. 1500/ம் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும்.

மேலதிக விபரங்கள் மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

**சீ. வீ. கே. சிவஞானம்**
மாநகர ஆணையாளர்.
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
22—03—82. 2639

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கொக்குவில் மேற்கு துரையப்பா பாலசுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்துக்களும் உடமைப் பொருட்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

வழக்கு இல: 3249/ தத்துவம்
துரையப்பா பாலசுப்பிரமணியம் கைம்பெண் விமலா தேவி.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில், தொடுக்கப்பட்டு இதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம் ஆண்டு பங்குனி மாதம் 26ந் திகதியன்று முற்பகல் 9.00மணிக்கு மூன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றுர்.

1982ம் ஆண்டு பங்குனி மாதம் 24ந் திகதி இந் நீதிமன்ற உத்தரவுப்படி.

**கோ. ஆ. கந்தசாமி**
பதிவாளர்

என்னுல் வரையப்பட்டது:

**சி. சிதம்பரநாதன்**
மனுதாரின் சட்டத்தரணி.
2654

# தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா நினைவு தினச் சொற்பொழிவு எதிர்வரும் 27ம், 29ம் திகதி ஆகிய இருதினங்களும் நடைபெறும்.

இச் சொற்பொழிவினை தந்தை செல்வா அறங்காவல் குழு ஒழுங்கு செய்துள்ளது.

யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரியிலுள்ள ரேபட் வில்லியம்ஸ் மண்டபத்தில் மாலை 6 மணிக்கு நடைபெறும் நினைவு தினச் சொற்பொழிவினை அவுஸ்திரேலியப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் திரு. எஸ். அரசரத்தினம் நிகழ்த்துவார்.

முதல்நாள் நிகழ்ச்சிக்கு யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் திரு. கே. இந்திரபாலாவும் இரண்டாம் நாள்நிகழ்ச்சிக்கு கொழும்புபல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் திரு. பி. பஸ்தியாம்பிள்ளையும் தலைமை தாங்குவார்கள்.

இந்நிகழ்ச்சிகளின் போதும் அறவழிப் போராட்டக்குழு உறுப்பினர்கள் தொண்டர்களாகக் கடமையாற்றுவார்கள். (பச்சிலைப்பள்ளி நி.)

## கன்னியாகுமரி---

(2ம்— பக்கத்தொடர்ச்சி)

பிய தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார். (வெ)

## கட்டைக்காடு...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்யப்பட்டது தெரியுமா?—எனக்கு பத்தாம் திகதி தான் தெரியும்.

சட்: நீர் எத்தனை தரம் முறைப்பாடு கொடுத்தீர்?—8ம் திகதியும் ஓர் முறைப்பாடு கொடுத்தேனும். ஆனுல் அது எனக்குத் தெரியாது.

மேல் விசாரணை மே 4ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. [க]

## சரசாலை...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது தான் நான் குழந்தைப்பிள்ளைகளது சண்டை பெரியவர்கள் சண்டையாக வந்துவிடுமே எனக் கூறினேன்.

இருபகுதியாரும் எனக்குப் பொதுவானவர்கள் எவரிடமும் விருப்போ அல்லது வெறுப்போ இல்லை. விசாரணை ஏப்ரல் 28ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (க)

## தடை விதிக்க கம். கட்சி கோரிக்கை

சென்னை, மார்ச் 24

கன்னியாகுமரி மாவட்டத்தில் வன்செயலுக்கு காரணமாக இருந்த இயக்கங்களுக்கு தடை விதிக்கவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. அம்பிகாபதி கூறியுள்ளார்.

## சிரமதானமூலம் வீதி வேலைகள்

(கரவெட்டி)

கரணவாய் சிவலிங்கம் மில் வீதி சிரமதான மூலம் அமைக்கப்பட்டது. இச்சிரமதான வேலைகளை உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

## காணவில்லை



நல்லூர் குறுக்கு வீதியிலுள்ள வீட்டிலிருந்து 13—14 வயதுள்ள வேலைக்காரப் பெண் 19—3—82 காலை 9 மணிக்குப் பின்னர் கடத்தப்பட்டுவிட்டார். 4—4½ அடி உயரம். முகம் வெண்மை. கை கால்களில் உரோமம். தலைமயிர் தோள்வரை உள்ளது. ஒன்ருகக் கூட்டி கட்டியிருக்கும் பார்வைக்குச் சிறு பெண். பெயர் சரோ. யாழ். பொலிசுக்கு அறிவித்தாகிவிட்டது. இப்பெண் இப்போது இருக்கும் விலாசம் மற்றும் தகவல்களை உடன் அறிவிக்கவும். இ. திருநாவுக்கரசு, 19, நல்லூர் குறுக்கு ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். (2645)


இளந்தமிழர் மன்றம் — காங்கேசன்துறை

**பாரதி நூற்றுண்டு விழாவும் 24-ம் ஆண்டு நாடகப் போட்டியும்**

1-ம் பரிசு: தங்கப்பதக்கம்
ஏனைய தகுதி வாய்ந்த பரிசில்களும்,
சிறந்த நடிகர் பரிசில்களும் உண்டு.
நேர உச்சவரம்பு 1 மணித்தியாலம் இடைநிலைத் தெரிவில் தெரிவாகும் நாடகங்கள் மட்டுமே இறுதிப் போட்டிக்கு அனுமதிக்கப்படும்.
விண்ணப்ப முடிவு திகதி: 10—4—82
மேலதிக விபரங்கட்கு தொடர்பு கொள்ளலாம்.
முகவரி:
கனக. மகேந்திரா,
கலைத்துறைச் செயலாளர், இளந்தமிழர் மன்றம்,
பூம்புகார், காங்கேசன்துறை. (2649)



**தங்க நகைகளுக்கும் தங்க கட்டிகளுக்குமான பணவசதி**

**த பிறுன்ஸ் கம்பனி**
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
**தங்க நகைகளுக்கும்,**
**தங்க கட்டிகளுக்குமான**
**பணவசதி**
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
விற்பனை முகாமையாளர்,

**த பிறுன்ஸ் கம்பனி லிமிட்.**
249, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7680



**சிசில் (SISIL) குளிர்சாதனப் பெட்டிகள்**

பணம் கட்டிய உடனே கொடுக்க முடியுமென மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்ருேம்.
ஒரு வருட உத்தரவாதமும் விற்பனைக்குப் பின் சேவையும் உள்ளது.

வடமாகாண விநியோகஸ்தர்கள்:
**சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட்,**
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# கீரிமலை கவுணாவத்தை வைரவர் ஆலயம் உயிர்ப்பலிக்கு அனுமதி கோரி மனு:

## 31-ல் விசாரணை

(மாவிட்டபுரம்)

கீரிமலை கவுணாவத்தை வைரவர் ஆலய உயிர்ப்பலி தொடர்பான மனு இம்மாதம் 31ந் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைசெய்யப்படவுள்ளது.

மே மாதத்தில் உயிர்ப்பலியிடும் வழக்கமாகையால் அதற்குள் விசாரணையைப் பூர்த்தியாக்க வேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்தே நீதிபதி மேற்படி தவணைக்கு வழக்கை ஒத்திவைத்துள்ளார்.

கீரிமலை கவுணாவத்தை வைரவர் ஆலயத்தில் ஆடு, கோழி பலியிடுவதைப் பொலிஸார் தடை செய்யக்கூடாதென்று உத்தரவிடவேண்டுமெனக் கோரி ஆலயமுகாமையாளர் ஆறுமுகம் வைத்தீஸ்வர ஐ. இம்மனுவை மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல்செய்திருந்தார்.

இதில் காங்கேசன்துறைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி, சட்ட மா அதிபர், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இம்மனு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதும் பொலிஸ் மா அதிபருக்கு இது பற்றிய அறிவித்தல் இன்னமும் வழங்கப்படவில்லையென்று நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

எதிர்வரும் வைகாசி மாதத்திலேயே வருடாந்த உயிர்ப்பலி செய்யும் தினம் வருவதால் அதற்கிடையில் விசாரணையை முடிக்க வேண்டுமெனவும் நீதிபதியிடம் கோரப்பட்டது.

பொலிஸ் மா அதிபருக்குத் திரும்பவும் அறிவித்தல் அனுப்புமாறு உத்தரவிட்ட நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் விசாரணையை இம்மாதம் 31ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

## நிவாரணம் கிடைக்கும்

சென்னை, மார்ச் 24

கன்யாகுமரி மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வகுப்புக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கமதத்தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் கலவரம் நடந்த பகுதிகளை கடந்த இரண்டு நாட்களாக அமைதிக் குழுவின் தலைவர் தவத்திரு குன்றக்குடிஅடிகளார் தலைமையில் மதத்தலைவர்கள் சுற்றிப் பார்வையிட்டனர். (வெ)

## அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கம் பொறுப்பேற்று நடத்தும் தகுதிவாய்ந்த நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் தொழில்சட்டங்களை அமுல் நடத்துவதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## பங்களாதேஷ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முகமட் ஜெஸ்கான் ஆட்சி நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுள்ளார். விமானப்படை, கடற்படையைச் சேர்ந்த அதிகாரிகளும், இராணுவ அதிகாரத்தை ஏற்றுள்ளனர்.

### தலைநகரில் துப்பாக்கிச்சூடு

பங்களாதேஷ் தலைநகரில் இன்று காலையிலிருந்து துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் கேட்டுக்கொண்டிருப்பதாக ஜப்பானிய தூதரகம் அறிவித்திருக்கிறது.

விமான நிலையத்தில் வழக்கம்போல சேவை நடைபெற்று வருகிறது.

### பாராளுமன்றம் கலைக்கப்பட்டது

ஜனாதிபதி அப்துல் சதார் உப ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் பதவிநீக்கஞ் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்டம் இடைநிறுத்தப்பட்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி படுகொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து பதவிக்கு வந்த இராணுவ ஜெனரல் அப்துல் சதார் கட கடந்தநவம்பரில் நடந்ததேர்தல்மூலம் மீண்டும் ஜனாதிபதியானார்.

பங்களாதேஷின் தேசிய தினக் கொண்டாட்டத்திற்கு 48 மணித்தியாலத்திற்கு முன்னர் இத்திடீர்ப் புரட்சி நடந்துள்ளது.

11 ஆண்டுகளில் 5வது தடவையாகவும், கடந்த 10 மாத காலத்தில் இரண்டாவது தடவையாகவும் பங்களாதேஷில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

மக்களை வழமைபோல வேலைக்குச் செல்லுமாறும், தமக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுள்ள இராணுவ ஜெனரல் தெரிவித்துள்ளார்.

### இராணுவத்தினர் அதிருப்தி

புதிய அரசியலமைப்புக் காரணமாக இராணுவத்தினர் மத்தியில் அதிருப்தி நிலவிவந்ததாகவும், நிர்வாகத்தில் இராணுவத்தினருக்கும் பங்கு அளிக்கவேண்டுமென வலியுறுதப்பட்டு வந்ததாகவும் இதற்கு அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### ஊழல் மலிந்துவிட்டது

நாட்டில் ஊழல் மலிந்திருப்பதாகவும், தேவையில்லாமல் சொத்துக்கள் சிலரிடம் முடங்கிக்கிடந்ததாகவும் எதிர்ப்புக் கிளம்பியிருந்தாகவும் கூறப்படுகிறது.

புதிய ஜெனரல் பங்களாதேஷ் மக்களுக்கு வானொலி மூலம் உரை நிகழ்த்துவாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் இடம் பெற்ற சதிப்புரட்சியை அடுத்து அந்நாட்டில் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பங்களாதேஷின் இராணுவச் சட்ட நிர்வாகியாக இராணுவத் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் ஹுசெய்ன் முகமத் பொறுப்பேற்றுள்ளாரெனவும் தெரிவிக்கப்பட்டது.

பங்களாதேஷில் இடம் பெற்ற சதிப்புரட்சியைத் தொடர்ந்து இந்திய—பங்களாதேஷ் எல்லையில் இந்தியப் படைகள் உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (வெ)

# கோடரியால் வெட்டிக்கொலை!

(யாழ்ப்பாணம்)

கோடரி வெட்டுக்கிலக்காகிய ஒருவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்துமரணமானார்.

கே. பாஸ்கரன் என்பவரே கோடரியால் வெட்டப்பட்டு மரணமடைந்தவராவார்.

மாங்குளம் பிள்ளையார் கோவிலடியில் இக்கோரசம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இக்கொலை சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஏ. நடராசா என்பவரை மாங்குளம் பொலிசார் கைது செய்ததுடன் இரத்தக் கறை படிந்த கோடரி ஒன்றையும் இவரிடமிருந்து கைப்பற்றியுள்ளனராம்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (மா)

## ஊரெழு கிழக்கு திருட்டு:

# ரூ. 20,000 நகைகள் மீட்பு இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

ஊரெழு கிழக்கிலுள்ள வீடொன்றில் நிகழ்ந்த 20 ஆவ்ரத்து 370 ரூபா பெறுமதியான தங்கநகைத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக அழ்வீட்டில் வேலைபார்த்த பணியாளரை பொலிசார் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்ததுடன் திருடப்பட்ட நகைகளையும் மீட்டுள்ளனர்.

ஊரெழு கிழக்கில் ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர் தம்பிமுத்து மகாலிங்கம் என்பவர் தமது வீட்டில் கடந்த 15ம் திகதி வேலைக்காரனாக இருந்த பொன்னையா வடிவேல் என்பவர் 20,370 ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிக்கொண்டு சென்றுள்ளதாக சுன்னாகம் பொலிசில் புகார்செய்துள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொன். சுகுணேந்திரன் தலைமையில் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள்களான எஸ். கந்தசாமி, ரட்ணராஜா, சிவயோகம் ஆகியோர் வேலைக்காரனைக் கைது செய்து விசாரனை மேற்கொண்டபோது திருடப்பட்ட நகைகள் யாழ்ப்பாணத்திலுள்ள கோபாலன் குண்டுமணி என்பவரின் வீட்டில் 5,000 ரூபாவுக்கு அடகு வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது.

இந்த நகைகளை மீட்ட பொலிசார் இத்திருட்டுக்குத் தூண்டுதலாக இருந்ததாக ஒருவரையும் கைது செய்து றிமாண்டில் வைத்துள்ளனர். (மா)

'ராம்சன்ஸ்'

விசேஷ மலிவு விற்பனை

+ TRAVELLING BAGS + SCHOOL BAGS
+ LADIES HAND BAGS
+ SHOPPING BAGS + RAINCOATS
+ PURSES etc.

இடம்: வீரசிங்கம் மண்டபம்
திகதி: மார்ச் 24 — 25 வரை
காலை 9 மணிமுதல் இரவு 7 மணி வரை

2638

# பெற்ரேல்நிலையக் கொள்ளைவழக்கு

(மாவிட்டபுரம்)

புன்னாலைக்கட்டுவன் பெற்ரேல் நிலையக்கொள்ளை வழக்கு இம்மாதம் 30-ம் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக் கெடுக்கப்பட உள்ளது.

புன்னாலைக்கட்டுவன் பெற்ரேல் நிலையத்தில் துப்பாக்கி முனையில் 1400 ரூபா பணமும் பெற்ரேல் நிலைய மனேஜரின் 7000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியும் கொள்ளையிடப்பட்டது. தொடர்பாக குப்பிளானைச் சேர்ந்த விசுவலிங்கம் சங்கரலிங்கம் என்பவர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு, அவர் சுற்றவாளி எனக்கூறியதால் விசாரணைக்காக வழக்கு ஒத்திப்போடப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்பட்ட போது விசாரணை செய்ய நேரம் போதாமையால் இம்மாதம் 30—ம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டது.

# இரர்ணுவ ஆட்சி:

## ஜனாதிபதி வரவேற்பு

டாக்கா. மார்ச் 24

''பங்களாதேஷில் ஆயுதப் படைகள் நாட்டின் நிர்வாகத்தை பொறுப்பேற்றிருப்பது தவறான செயலல்ல''

இவ்வாறு ராணுவ சதி முயற்சியின் மூலம் பதவிநீக்கம் செய்யப்பட்ட பங்களாதேஷ் ஜனாதிபதி ஜனாப் அப்துல்சதார் வானொலி மூலம் இன்று விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

நாட்டில்நிலவும் ஊழல்களை களைந்தெறியவும், சட்டம், ஒழுங்கை நிலைநாட்டவும் ராணுவஆட்சி அவசியமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பதவிநீக்கம் செய்யப்பட்ட ஜனாப் அப்துல் சதார் பங்களாதேஷின் 7வது ஜனாதிபதியாவார். (வெ)

# வங்கிக்கொள்ளை: சந்தேகநபர் கைது

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிக் கிராமிய வங்கிக் கொள்ளைச் சந்தேக நபர்களில் ஒருவரான ஞானப்பிரகாசம் ஞானசேகரன் நேற்று இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு யாழ். மேல்நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்டார்.

நீதிபதி ஜனாப் எம். ஜமீல் ஜூலை 26ம் திகதி வரை சந்தேகநபரை றிமாண்டில்வைக்கும்படி உத்தரவிட்டார்.

1977 ஜூன் 21ந் திகதி திருநெல்வேலி கிராமிவங்கியில் ரூபா 9,372 ரொக்கப் பணமும், ரூபா 1165 பெறுமதியான நகைகளும் துப்பாக்கிமுனையில் கொள்ளையடிக்கப்பட்டது. பொன்னம்பலம் பற்றிக், கோவிந்தன் பரமேஸ்வரன், ஞானப்பிரகாசம் ஞானசேகரம் ஆகியோர் இக் கொள்ளை தொடர்பாகத் தேடப்பட்டுவந்தனர்.

ஞானசேகரனைத் தவிர ஏனைய இருவரும் இன்னமும் கைதுசெய்யப்படவில்லை.

நேற்று சந்தேகநபர் சார்பில்சட்டத்தரணி எம்.ஆலாலசுந்தரம், சட்டத்தரணி திருமதி சுரேந்திரனின் அனுசரணையுடன் ஆஜராகியிருந்தார். (மா)

## நாதன் .....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தகனஞ்செய்யப்பட்டது.

இதற்கு முன்னர் 'நாதனின், இல்லத்தில் நடைபெற்ற இறுதிச்சடங்குகளில் வடபிராந்தியப் பொலிஸ் மா அதிபர் திரு. அ. நவரட்ணம், பிரிகேடியர் ரணதுங்கா, யாழ் பொலிஸ் அதிபர் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு மலர்வளையம் சாத்தினர்.

பொலிஸாரின் சார்பில் அஞ்சலி தெரிவித்த திரு. ரி. நவரத்தினம் காலஞ்சென்ற கான்ஸ்டபிள் நாதன் பத்தொன்பது வருடகாலமாக பொலிஸ் சேவையில் கடமையாற்றியுள்ளார் என்றும் நூற்று இருபது சான்றிதழ்களை அவர் பெற்றுள்ளார். என்றும் விரைவிலேயே ஒரு சார்ஜன்டாக அவர் பதவி உயர்வு பெறஇருந்தார் என்றும் கூறினார்.

## கெற்பேலி

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று எதிரிகளையும் குற்றவாளிகளெனத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (மா)

## மரண அறிவித்தல்

### வ. அப்பாப்பிள்ளை

இளைப்பாறிய பிரதம கலால் இன்ஸ்பெக்டர் காலமானார். ஈமச்சடங்குகள் இன்று (25.03.82) பிற்பகல் இரண்டு மணியளவில் மாதகலில் நடைபெறும். தகவல்:— திருமதி ப. அப்பாப்பிள்ளையும், பிள்ளைகளும். 2658

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் மார்ச் மீ 25-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered at News Paper. The General P.O Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna தொலைபேசி 77 07, 889, 8126.